| | |
|---|---|
| **Supporting Your Child's Communication in Kindergarten** | **மழலையர் பள்ளி நிலையில் உங்கள் குழந்தையின் தகவல் தொடர்பை ஆதரிப்பது** |
| **Speech and Language** | **பேச்சு மற்றும் மொழி:** |
| Speech-Language Pathologists (S-LPs) at DDSB collaborate with educators and families to nurture oral language, play, social interactions, reading, and writing within the play-based kindergarten classroom. We recognize and value that children enter kindergarten with their own strengths, experiences, and ways of communicating, and that each child will continue developing new skills at their own pace. | DDSB'ல் உள்ள பேச்சு-மொழி நோயியல் வல்லுநர்கள் (Speech-Language Pathologists - S-LPs) ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தாருடன் இணைந்து, மழலையர் பள்ளி வகுப்பில் குழந்தைகளின் பேசும் திறன், விளையாட்டு திறன், சமூகத் தொடர்புகள், வாசிப்பு மற்றும் எழுதுதல் திறன்களை வளர்க்க உதவுகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தனித்தன்மை, அனுபவங்கள் மற்றும் தனித்துவமான தகவல்தொடர்பு வழிகளுடன் மழலையர் பள்ளி வகுப்பிற்கு வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையும் தங்களுடைய வேகத்தில் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளத் தொடங்குவர். |
| As your child begins school, their communication and social skills will help them make friends, follow routines, and take part in classroom activities. Every child communicates in their own way—through spoken languages (like English or Hindi), sign language, facial expressions, gestures, pictures, or technology like speech-generating devices. | குழந்தை பள்ளியில் சேரும் போது, அவர்களது தகவல் தொடர்பு மற்றும் சமூகத் திறன்கள் நண்பர்களைச் சேர்க்கவும், தினசரி நடைமுறைகளைப் பின்பற்றவும், வகுப்புச் செயல்பாடுகளில் பங்கேற்கவும் உதவும். ஒவ்வொரு குழந்தையும் தன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்கிறது—வாய்மொழி (ஆங்கிலம், இந்தி போன்றவை), சைகை மொழி, முகபாவனைகள், சைகைகள், படங்கள், அல்லது குரல் உருவாக்கும் சாதனங்கள் போன்ற தொழில்நுட்பங்களின் மூலம். |
| **Hearing and Vision** | **செவித்திறன் மற்றும் பார்வைத் திறன்:** |
| Hearing and vision are key to learning, playing, and communicating. | செவித்திறனும் பார்வைத் திறனும் கற்றல், விளையாட்டு மற்றும் தகவல் தொடர்பு கொள்ள மிகவும் முக்கியம். |
| Consider having your child's hearing and vision checked, especially if you notice: | உங்கள் குழந்தையின் செவித்திறன் மற்றும் பார்வைத் திறனைச் சோதிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது, குறிப்பாக நீங்கள் |

| | |
|---|---|
| | பின்வருவற்றைக் கவனிக்கும் போது: |
| • Frequent ear infections | • அடிக்கடி காது அழற்சி ஏற்படுவது |
| • Speaking loudly or asking others to repeat | • மிகவும் சப்தமாகப் பேசுவது அல்லது மற்றவர்களை மீண்டும் கூறும்படி கேட்பது |
| • Squinting or covering one eye | • ஒரு கண்ணைச் சுருக்கிப்பார்ப்பது அல்லது ஒரு கண்ணைக் கை வைத்து மறைப்பது |
| • Rubbing or touching their eyes often | • கண்களை அடிக்கடி தேய்த்தல் அல்லது தொடுதல் |
| | |
| **Build Language and Literacy Skills Through Everyday Activities** | **அனைத்து தினசரி செயல்பாடுகளிலும் மொழி மற்றும் எழுத்தறிவுத் திறன்களை வளர்க்கவும்** |
| You don't need special tools to build language and literacy skills —just everyday moments! Try these simple ideas: | மொழி மற்றும் எழுத்தறிவுத் திறன்களை வளர்க்க சிறப்புக் கருவிகள் தேவையில்லை – தினசரி நிகழ்வுகள் போதுமானவை! இந்தச் சில சுலபமான யோசனைகளை முயற்சி செய்து பாருங்கள்: |
| • **Play together every day**: Whether it's board games, sports, or pretending with toys, play helps children learn new words and social skills while having fun! | • **ஒவ்வொரு நாளும் சேர்ந்து விளையாடுங்கள்:** பலகை விளையாட்டுகள், விளையாட்டுக்கள், பொம்மைகளுடன் கற்பனை விளையாடுதல் ஆகியவை எதுவாக இருந்தாலும், விளையாட்டுக் குழந்தைகள் புதிய வார்த்தைகள் மற்றும் சமூகத் திறன்களைக் கற்றுக் கொள்ள உதவுகிறது, அதே நேரத்தில் அவர்கள் மகிழ்ச்சியாக விளையாடுவர்! |
| • **Talk about what you see and do**: Language is everywhere! Discuss what you see and do during walks, drives, or daily routines such as trips to the grocery store. | • **நீங்கள் பார்க்கும் மற்றும் செய்யும் விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்:** மொழி எங்கும் உள்ளது! நடைபயணம், கார் பயணம் அல்லது அன்றாடச் செயல்பாடுகள் (உதாரணம்: மளிகை கடைக்குச் செல்லுதல்) போன்றவற்றின் போது காணும் விஷயங்கள், செய்யும் விஷயங்கள் பற்றிக் குழந்தையுடன் விவாதிக்கவும். |
| • **Encourage your child to tell stories or explain things:** Provide opportunities for your child to share and use language by asking them to explain how they made/built something or telling you about their day (e.g., "what was something that made you laugh today?"). | • **குழந்தையைக் கதைகள் சொல்ல அல்லது விஷயங்களை விளக்க ஊக்குவியுங்கள்: உங்கள் குழந்தைக்கு மொழியைப் பகிரவும் பயன்படுத்தவும்** வாய்ப்பு வழங்குங்கள் உதாரணமாக, அவர்களிடம் எதையாவது உருவாக்கிய/செய்த விதத்தை விளக்கச் சொல்லச் கேட்கவும், அல்லது அவர்களது நாளை பற்றிக் கூறச் சொல்லவும் (எ.கா., "இன்று உன்னைச் சிரிக்க வைத்த விஷயம் என்ன?"). |

| | |
|---|---|
| • **Read and tell stories in your home language:** Learning two or more languages does not cause speech or language delays. In fact, it benefits children's well-being, language and literacy development, as well as their thinking and learning skills. | • **உங்கள் வீட்டில் பேசப்படும் மொழியில் கதைகளை வாசித்துச் சொல்லுங்கள்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றுக்கொள்வது மொழி அல்லது பேசும் திறனில் தாமதத்தை ஏற்படுத்தாது. மாறாக, இது குழந்தைகளின் நலன், மொழி மற்றும் எழுத்தறிவுத் திறன், சிந்தனை மற்றும் கற்றல் திறன்களை மேம்படுத்த உதவும். |
| | |
| **Need Support?** | ஆதரவு தேவைப்படுகிறதா**?** |
| Here are some helpful resources for families: | குடும்பங்களுக்குச் சில பயனுள்ள வளங்கள்: |
| • **Eye See...Eye Learn Program** – Free eye exams and help finding an optometrist | • **Eye See...Eye Learn Program** – இலவச கண் பரிசோதனை மற்றும் கண் மருத்துவரை கண்டுபிடிக்க உதவி |
| • **Grandview Kids** – Preschool speech-language services and tips for home | • **Grandview Kids** – முன்பருவப் பள்ளி பேச்சு-மொழி சேவைகள் மற்றும் வீட்டில் செய்யும் வழிமுறைகள் |
| • **College of Audiologists and Speech-Language Pathologists of Ontario (CASLPO)** – An on-line public register to find licensed speech-language pathologists or audiologists | • ஒன்ராறியோ மாகாணத்தின் செவிப்புலன் நிபுணர்கள் மற்றும் பேச்சு-மொழி நோயியல் வல்லுநர்கள் கழகம் **(College of Audiologists and Speech-Language Pathologists of Ontario - CASLPO)** – உரிமம் பெற்ற பேச்சு-மொழி நோயியல் வல்லுநர்கள் அல்லது செவிப்புலன் நிபுணர்களைக் கண்டுபிடிக்க ஆன்லைன் பொதுப் பதிவு |
| • **DDSB Speech, Language & Hearing Services** – Learn more about speech, language, and hearing services at DDSB | • **DDSB** பேச்சு, மொழி மற்றும் செவித்திறன் சேவைகள் – DDSB'ல் பேச்சு, மொழி மற்றும் செவித்திறன் சேவைகள் பற்றி மேலும் அறிய |

*The following document was translated by Language Marketplace.*